O.S. No: 55/2022
பெயர்: ருக்மணி
**பி.சா. 6**
11-03-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.28**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்து என் தாயாருக்கு சொந்தமானது. எனக்கு நாங்கள் சமீபத்தில் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி B schedule ஆக கடைசியில் உள்ள கொல்லைப்பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் நிரந்தரமாக வசிப்பது சென்னையில் என்றால் ஆமாம். பாகப்பிரிவினை பத்திரத்தில் கையெழுத்து செய்வதற்காக நான் முதல் நாள் தான் கும்பகோணம் வந்தேன் என்றால் ஆமாம். நான் என்னுடைய ஆதார், பேன் கார்டு ஆகியவற்றின் நகல்களை வாட்ஸ் ஆப் மூலம் சோமசுந்தரத்தின் மொபைலுக்கு அனுப்பி வைத்தேன் என்றால் ஆமாம். 3 பாகஸ்தர்களுக்கும் பொதுவான செப்டிக் டேங்க் என்னுடைய பங்கில் தான் உள்ளது என்றால் ஆமாம். 3 பாகஸ்தர்களுக்கும் உள்ள செப்டிக் டேங்கை கழித்து விட்டு எனக்கு பாகம் ஒதுக்கவில்லை அந்த பகுதியையும் சேர்த்து தான் எனக்கு பாகம் ஒதுக்கி உள்ளார்கள் என்றால் ஆமாம். செப்டிக் டேங்க் என்னுடைய பாகத்தில் இருக்கும் விவரம் எனக்கு ஆரம்பத்தில் பத்திரம் பதிவு செய்யும் போது தெரியாது என்றால் எனக்கு அப்போதே தெரியும். மற்ற இரண்டு பாகஸ்தர்கள் குறிப்பாக வாதியின் செப்டிக் டேங்க் கழிவுகள் இந்த இடத்திற்கு தான் வருகிறது என்றால் ஆமாம். என்னுடைய இடத்தில் நான் ஏதாவது கட்டுமானம் செய்ய வேண்டும் என்றால் அந்த செப்டிக் டேங்கை பயன்படுத்தக்கூடாது என்று நான் தெரிவித்தால் வாதிக்கு சிரமம் ஆகிவிடும் என்றால் ஏற்கனவே இதுகுறித்து நாங்கள் அண்டர்கிரவுண்ட் வழியாக அரசு கழிவுகளை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பதால் அவ்வாறு பயன்படுத்திக்கொள்ளலாம் என்று முடிவெடுத்துதான் செயல்பட்டோம். அவ்வாறு எங்களுக்குள் எழுத்துப்பூர்வமாக எதுவும் எழுதிக்கொள்ளவில்லை என்றால் வாய்மொழியாக பேசிக்கொண்டோம். அவ்வாறு நாங்கள் எதுவும் பேசிக்கொள்ளவில்லை பொய்யாக

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika,
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சண்முகம் குடியிருக்கும் வீடு, கீழ்புறமாக உள்ள மாடிப்படி ஆகியவை 2002 லேயே கட்டப்பட்டது என்றால் ஆமாம். அவ்வாறு வாதி 2002ல் கட்டும் போது மூத்த சகோதரர் செல்வகணபதி உயிருடன் இருந்தார் என்றால் ஆமாம். வாதி கட்டி முடித்து கிரக பிரவேசம் செய்ததற்கு நான் செல்வகணபதி ஆகிய அனைவரும் சந்தோஷமாக போய் கலந்து கொண்டோம் என்றால் ஆமாம். கீழ்புறம் உள்ள மாடிப்படி வழியாகத்தான் முதல் தளத்திற்கு போக வேண்டும் என்றால் ஆமாம். அந்த மாடிப்படிக்கும் வாதியின் வீட்டிற்கும் நடுவே கொல்லை வரை போவதற்கு பொதுப்பாதை உள்ளது என்றால் ஆமாம். அந்த கொல்லை வழியாகத்தான் நான் என்னுடைய B schedule சொத்திற்கு போக வர இருக்கிறேன் என்றால் ஆமாம். கொல்லையில் 7,8 தென்னை மரம், மூன்று பலா மரம், ஒரு மாமரம் ஆகியவை காய்க்கும் மரங்களாக உள்ளது என்றால் ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் நான் தான் பலா மரத்தில் காய் பறிக்கிறேன் என்றால் இது நானா என்று தெரியவில்லை. வழக்கிற்கு பின்னர் நான் அங்கே போகவே இல்லை. நானும் என்னுடைய உறவினர்களும் கொல்லை புறம் போவதற்கு வாதி தடுப்பதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் அந்த உறவினர் யார் என்று பெயர் குறிப்படவில்லை என்றால் ஆமாம். நான் வழக்கிற்கு முன் தான் கொல்லைபுறம் போயிருக்குறேன் என்று சொல்லிவிட்டு தற்போது முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 சோமசுந்தரம் கைப்பட எழுதியது என்றால் ஆமாம். என்னுடைய பங்கிற்கான தொகையும் நான் கொடுத்து விட்டேன் என்றால் எல்லோருக்கும் சேர்த்து நாங்கள் கேட்டுக்கொண்டதன் படி அவர் செலவு செய்தார் நாங்கள் எங்கள் பங்கை கொடுத்துவிட்டோம். மாடிப்படியை இடிக்காமலேயே பொதுப்பாதையை பயன்படுத்த வேண்டும் என்று தான் வாதி வழக்கு போட்டிருக்கிறார் என்றால் ஆமாம். நாங்கள் பதிவு செய்த பாகப்பிரிவினை பத்திரத்தில் மாடிப்படியை இடிப்பதாக கண்டு எழுதப்படவில்லை என்றால் நாங்கள் பொதுவாக பேசி பொதுப்பாதையில் இருப்பதை அகற்றிவிடலாம் என்று முடிவு செய்ததால் அதை எழுதவில்லை. மாடிப்படியை இடிப்பது தொடர்பாக தனியாகவும் பத்திரம் எதுவும் எழுதிக்கொள்ளவில்லை என்றால் ஆமாம். மாடிப்படியை

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika,
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

இடிக்காமலேயே 5 அடி பொதுப்பாதையில் போய் வருதாகத்தான் பேச்சு என்றாலும், தற்போது பாகப்பத்திரம் எழுதிக்கொண்ட பிறகு மாடிப்படியை இடிக்க ஒத்துகொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், வாதியும் சோமசுந்தரத்தின் மீதுள்ள நம்பிக்கையின் பேரில் தான் பாகப்பத்திரத்தில் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சேர்ந்து முடிவெடுத்துதான் பாகப்பத்திரம் தயார் செய்து கையெழுத்து செய்தோம். A schedule, C schedule சொத்துக்களை கண்காணிப்பதற்காகத்தான் வழக்கிற்கு பின்னர் சிசிடிவி கேமரா வைக்கப்பட்டது என்றால் தவறு. வழக்கிற்கு பின்னர் சோமசுந்தரத்தின் வயதான தாயார் தனியாக இருப்பதால் C scheduleல் மட்டும் சிசிடிவி கேமரா வைக்கப்பட்டது. A schedule மற்றும் B schedule ற்கு போவதாக இருந்தால் இந்த C scheduleல் உள்ள பொதுப்பாதை வழியாகத்தான் போகவேண்டும் என்றால் C schedule வீட்டை ஒட்டியுள்ள தாழ்வாரம் வழியாகத்தான் போகவேண்டும். C scheduleல் பொதுப்பாதை உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் நானும் என்னுடைய உறவினர்களும் என்னுடைய B scheduleக்கு போகும் போது வாதி ஏசுவதாகவும், பேசுவதாகவும் சொன்னதை நிரூபிக்க சிசிடிவி புட்டேஜை காண்பிக்க முடியுமா என்றால் அது நடந்த தேதி மாதம் நினைவில்லை அதனால் அதை எடுக்க முடியுமா என்று தெரியவில்லை. அவ்வாறு எந்த நிகழ்வும் நடக்காததால் தான் நான் அவ்வாறு பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாகப்பத்திரம் எழுதி முடித்த பிறகு மாடிப்படியை இடிக்க வேண்டும் என்று சோமசுந்தரம் சொன்னதற்கு நான் நீங்கள் வேண்டுமானால் பிழைத்திருத்த பத்திரம் எழுதிக்கொள்ளுங்கள் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. உள்ளது உள்ளபடி இருக்க வேண்டும் என்று பேசித்தான் பாகப்பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. நானும் சோமசுந்தரமும் மாடிப்படியை இடிக்க வேண்டும் என்று கட்சி நடத்துகிறோம் அவ்வாறு பேசப்படவில்லை என்று வாதி கட்சி செய்கிறார். எனவே நீதிமன்றமே தலையிட்டு பாகம் செய்து கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் மீண்டும் பாகம் பிரிப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளது ஏற்கனவே நாங்கள் பதிவு செய்த படி பாகப்பத்திரம் படி செயல்படத்தான் விருப்பம். நானோ சோமசுந்தரமோ இன்றைய தேதி வரை மாடிப்படியை இடிக்க வேண்டும் என்று வழக்கு எதுவும் தாக்கல்

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika,
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

செய்தோமா என்றால் இல்லை . வாதி கோரியபடி அவருக்கு பரிகாரம் கிடைக்கத்ததக்கது என்றாலும் நான் தேவையில்லாமல் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

முடிக்கப்பட்ட நேரம்: 12.00

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika,
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.